உ

ஓம் சிவசக்தி துணை

# ஸ்ரீ சிவமனோன்மணியம்மை கவசம்



ஆக்கியோன்

அருட்கவி. சி. விநாசித்தம்பிப் புலவர்

2005

# ஸ்ரீ சிவ மனோன்மணியம்மை கவசம்

ஆக்கம்
அருட்கவி சீ. விநாசித்தம்பிப் புலவர்

வெளியீடு:
ஸ்ரீ நாகவரதநாராயணர் தேவஸ்தானம்
நாகேஸ்வரம் – அளவெட்டி

ஐந்தாம் பதிப்பு

உ



# ஸ்ரீ சிவமனோன்மணியம்மை கவசம்

## காப்பு

ஆதி மனோன்மணி அம்பிகை புத்திரன்
சோதி விநாயகன் துணையடிதொழுவாம்

இமயத் தமர்ந்த இறைவன் பாக
உமையேபார்வதி உத்தமி போற்றி
சொல்லும் பொருளும் சுரப்பாய் போற்றி
அல்லல் தீர்க்கும் அழகியே போற்றி
அருவுரு வாகிய ஆத்தாள் போற்றி

திருவருள் பொழியும் சிவையே போற்றி
சிங்கத்தமர்ந்த தேவியே போற்றி
செங்கம லாசனத் திருவே போற்றி
தண்கலை வழங்கும் சரஸ்வதி போற்றி
எண்குண நாயகி ஈஸ்வரி போற்றி
தத்துவா தீத சாம்பவி போற்றி
நித்தியா னந்த நிரஞ்சினி போற்றி
தொண்டரைக் காக்கும் சோதியே போற்றி
கன்னியே மனோன்மணிக் கற்பகம் போற்றி
என்னித யத்தில் இருப்பாய் போற்றி

எமதுயிர் தம்மை இயமனை உதைத்த
அமிர்த கடவூர் அபிராமி காக்க
சென்னியை ஆரூர் சிவகம லாலாம்பிகை
பொன்னடி வைத்துப் பொலிவுடன் காக்க
தகுவிழி யிரண்டும் தண்ணா னைக்கா
அகிலாண்ட டேஸ்வரி அருளுறக் காக்க
இருசெவி தன்னை எழில் அவி நாசிக்
கருணாம் பிகையாம் காரணி காக்க
பண்ணிசை வாயைப் பரவும் அண்ணாமலை

உண்ணா முலையாள் உள்நின்று காக்க

திருநீ றணியும் திலக நெற்றியை

தருமமீ னாட்சித் தாயார் காக்க

சீரணி நாவைச் சிருங்கேரிசாரதா

ஆரண கலைகளை அருளிக் காக்க

பல்லும் அண்ணமும் பராபரி கற்பக

வல்லி காக்க வழுவில் லாமல்

உதடுகள் இரண்டும் உருத்திரி காக்க

இதயம் தன்னை இலட்சுமி காக்க

சுவாச நாசியைச் சூலினி காக்க

கபால மெல்லாம காமாட்சி காக்க

மலையி லுதித்த மங்கள பகவதி

சிலைதரு தோளைத் திறல்மிகக் காக்க

எலும்பு நரம்புகள் இணைதசை உரோமம்
நலந்தரு தையல் நாயகி காக்க
ஆய தொண்டையை அணிஅறம் வளர்த்த
நாயகி காக்க நயந்தஆ மாத்தூர்
முத்தாம் பிகையார் முன்மார்பு காக்க
நித்தம் சுவாசம் நிகழ்த்தும் உறுப்பை
தில்லையி லாடும் சிவகாமி காக்க
வல்ல ஒற்றியூர் வடிவுடை யம்மை
வயிற்றைக் காக்க மருவுமுள்ளெலும்பை
இயற்கைமலைவளம் இசைந்த காளத்தி
ஞானப்பூங் கோதை நல்லாள் காக்க
தானம் தவங்கள் தருபயன் செழிக்க
கேதா ரத்தில் கீர்த்திநோன் புற்ற
ஆதார சக்தி அர்த்தநா ரீஸ்வரி
கருதிடும் ஆண்பெண் கருவாய் காக்க
வருமாபா னத்தை வல்லபை காக்க

இருந்திடுபிருட்டம இரத்த பீஜனின்
பெருந்தலை யறுத்த பெருங்காளி காக்க
நற்றமிழ் கேட்கஞானப்பால் கொடுத்தவள்
பற்றிடு மூளையைப் பரிந்து காக்க
கைகளும் விரல்களும் கணேசனைத் தந்த
மைவிழி துர்க்கா மகாசக்தி காக்க
பொருந்திய உடம்பெலாம் பொருப்புயர் கைலை
இருந்துயிர் புரக்கும் இராஜ ராஜேஸ்வரி
உமைசிவ சக்தி ஓங்கார ரூபிணி
அமையும் சுகந்தந் தன்புடன் காக்க
முற்றும் ஐம்புலன்கள் மோனவீ டுறங்க
வெற்றிவேல் கொடுத்த விமலை காக்க
வஞ்சனை வசியம் வாட்டும் பேய்பிணி
நஞ்சுகள் இவற்றால் நலிவுறா வண்ணம்
தந்திர வேத சாவித்திரி காக்க
எந்திரம் இடிமின் எதிர்ப்படு விலங்குகள்

நாக வினங்கள் நச்சுப் பூச்சிகள்
வேகுதீ நீர்வளி வெந்துயர்ப் படாமல்
வித்தகக் காசி விஸ்வலிங் கேசன்
வலிவுறு கால்தொடை மகிடனை வாளால்
கொலைபுரிந் தருளிய குமாரி காக்க
பாதமும் விரல்களும் பாற்கடல் துயிலும்
மாதவன் தங்கை வராகி காக்க
சக்தி விசாலாட்சித் தயாபரி காக்க
புத்திக் குழப்பம் புற்றுநோய்அம்மை
பித்தம் வாதம் பெருகு சிலேற்பனம்
குத்துக் குன்மம் குலையெரி சூலை
மெத்திக் குறையும் விக்கின இரத்தநோய்
சலமல மூச்சுச் சஞ்சலம் நரம்புநோய்
தலைவலி சோகைபெருவலி மூலம்
கரப்பன் திரள் புண் கண்டம் வாய் கண்

பரப்பும் கிரந்தி பயில்மூ ளைச்சளி
எனும் பல நோயால் இடர்ப்படா தெம்மைக்
கனநிழல் வேம்புக் கரகத் திருக்கும்
சந்திரசொரூபி தவமுத்து மாரி
மந்திரமருந்து வழங்கிக் காக்க
அக்கினிக் குண்டம் அமைந்த வேள்வியில்
தக்கனின் தலையைத் தறித்தாட் டுத்தலை
நல்கிய விரனின் நடனப்பத்தினி
சொல்சுக வாழ்வைச் சுரந்து காக்க
நவகோள் நாளால் நலியா வண்ணம்
பவநெறி விதிக்கும் பவானி காக்க
பூவும் நீரும பொலிதிருத் தொண்டும்
நாவினா லுன்புகழ் நயந்துபா டுதலும்
அன்புமடக்கமும் அறமுறைச் சிந்தையும்
நின்பதப் பூசையும் நித்தியம் பேணக்

கண்ணருள் பொழிந்து காயத்திரி காக்க
திண்ணிய பாசம் திரிசூ லமுடன்
காலன் வருமக் காலம் வந்துநின்
கோலங் காட்டிக் குளிர்பதம் தருவாய்
வெம்மா மலவிருள் விலக்குவாய் சரணம்
அம்மா மனோன்மணி யடியிணை சரணம்
ஐம்பத் தோரெழுத் தானாய் சரணம்
நம்பன் நமசிவாய நாடகி சரம்
சதாசிவ சோதிச் சங்கரி சரணம்
பதாம்பு யந்தரும் பராசக்தி சரணம்
உனைமற வாவரம் உதவுவாய் சரணம்
நினைவார் நெஞ்சினில் நிற்பாய் சரணம்
குறைபொறுத் தருள்வாய் குருமகள் சரணம்
மறைதரு மனோன்மணி மலரடி சரணம்

அன்புயா் வடிவந் தாங்கி ஆருயிரனைத்துங் காக்கும்
பொன்பொலி கைலைமேவும் புகழ்மனோன்மணியே எங்கள்
துன்பங்க ளறிவாயம்மா சுகத்துடன் தமிழர் எல்லாம்
இன்பமாய் வாழும் வண்ணம் இணையடி யருள் செய்வாயே

## பயன்

நீரொடு மலர்கள் தூவி நெஞ்சகம் குவிந்து போற்றி
ஆரணி மனோன் மணித்தாய் அருட்கவிக் கவசம் ஓதும்
சீரடி யார்கள் எல்லாம் சிந்தையில் நினைத்த செல்வம்
பாரினிற் பொருந்தி முன்னைப் பலவினை தீருவாரே

சுபம்

## தசாவதாரம்

தேவுடைய மீனமாய் ஆமையாய்
ஏனமாய் அரியாய்க் குறளாய்
மூவுருவில் இராமனாய்க் கண்ணனாய்க்
கல்கியாய் முடிப்பான் கோயில்
சேவலொடு பெடையன்னம் செங்கமல
மலரேறி யூச லாடி
பூவணைமேல் துதைத்தெழுசெம்
- பொடியாடி
விளையாடும் புனலரங்கமே.

- **பெரியாழ்வார்**

மீனம் - மற்சாவதாரம்
ஆமை - கூர்மாவதாரம்
ஏனம் - (பன்றி) வராக அவதாரம்
அரி - (சிங்கம்) நரசிங்க அவதாரம்
குறள் - (சிறிய அந்தணர்) வாமனாவதாரம்
மூவுருவில் இராமன் - பரசுராமன்
- பலராமன்
- இராமன்
கண்ணன் - கிருஷ்ணன்
கல்கி - கல்வி

திருமொழி அச்சகம், சங்கானை.